**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.44/2017**

**சாட்சியின் சான்றுரை DW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கர்ணன் (எ) கருணாநிதி | வட்டம் | - | |
| த/பெ | - | சுப்பிரமணியம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

05.09.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
பிரதிவாதி சாட்சி 2 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு வயது 65 ஆகிறது. தமிழ் எழுத படிக்க தெரியும். 9,10 பிரதிவாதிகள் என் அண்ணன்கள் என்றால் சரிதான். நான் தற்போது மகாராஜபுரம் ஹவுசிங் போர்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். இதற்கு முன்பாக ரயில்வே கோட்ரசில் குடியிருக்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு விழுப்புரத்தில் தாயாமானவர் வீதியில் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் இதுவரை குடியிருக்கவில்லை என்றால் சரிதான் ஆனால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அண்ணனுடன் சென்று குடியிருந்து வருவேன். நான் என்ன வேலை செய்வேன் என்றால் ரயில்வேயில் களப்பணியாளர் அதுபோக கார்பன்ட்டர் மற்றும் பிளாக்ஸ்மித் வேலை செய்வேன். இந்த வழக்கில் எதிர்வழக்குரை என் பெயிரில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் வேலாயுத ஆசாரி, சங்கர் ஆசாரி, சாமி ஆசாரி இவர்கள் அனைவரும் சபாபதி ஆசாரியின் சகோதரர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வேலாயுத ஆசாரி, பழனி ஆசாரியின் மகன் சுப்பிரமணிய

ஆசாரி, ராமலிங்க ஆசாரி, சக்திவேல் ஆசாரி ஆகியோரை தெரியும். வேலாயுத ஆசாரியின் தகப்பனார் பெயர் வைத்திய ஆசாரி. 5 சகோதரர்களுக்கும் பாத்தியமான சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றும் அவ்வாறு பாத்தியமானதுக்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது நீதிமன்ற தீர்ப்பாணை மூலம் சொல்லியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பாணை வேலாயுத ஆசாரி, சங்கர் ஆசாரி, சாமி ஆசாரி ஆகியோர் பெயரில் உள்ளதா என்றால் வேலாயுத பெயரில் அனுபவ சொந்தம் என்று உள்ளது. அவருடைய சமாதி உள்ளது. சபாபதி ஆசாரிக்கும் வேலாயுத ஆசாரி, சங்கர் ஆசாரி, சாமி ஆசாரி, தர்மலிங்க ஆசாரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் வேலாயுத ஆசாரி, சுப்பிரமணிய ஆசாரி, பழனி ஆசாரி ஆகியோர் தான் அனுபவித்து வந்தார்கள். வேலாயுத ஆசாரி, சங்கர் ஆசாரி, சாமி ஆசாரி, தர்மலிங்க ஆசாரி ஆகிய 4 பேரும் சபாபதி ஆசாரிக்கு உடன் பிறந்தவர்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆதாரம் என்னிடம் உள்ளது. எதிர் வழக்குரையில் சபாபதி ஆசாரி கிரையம் பெறவில்லை என்றும் எனது வ ாக்குமூலத்தில் சபாபதி ஆசாரி தான் கிரையம் பெற்றார் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா அனுபவித்து வந்த சொத்து தான் அது. வழக்கு சொத்து வேலாயுத ஆசாரி பெயரில் இருப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. வாய்தா உள்ளது. எனது பாட்டனார் பெயர் பழனி ஆசாரி பெயரில் வழக்கு சொத்திற்கு அனுபவத்தில் இருப்பதற்காக ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் வாய்தா சீட்டு உள்ளது. நான் பழனி ஆசாரி பெயரில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. 90 வருடமாக நாங்கள் அனுபவித்ததற்காக ஆவணம் உள்ளதா என்றால் எனது தாத்தாவின் கல்வெட்டு உள்ளது. புகைப்படம் உள்ளது. அவருடைய சமாதி உள்ளது. வாய்தா சீட்டு உள்ளது. ஆனால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற தீர்ப்பாணையில் அனைத்து வாசகங்களும் உள்ளது.

எனது வாக்குமூலத்தில் கர்ணன் (எ) கருணாநிதி இன்ஜினியரிங் வெர்க்ஸ் என்று நடத்துகிறேன் என்று சொல்லியுள்ளேன். ஆனால் எதிருரையில் அவ்வாறு சொல்லவில்லை என்றும் தற்போது எதிருரையில் சொல்லாததை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கர்ணன் (எ) கருணாநிதி இன்ஜினியரிங் வெர்க்ஸ் எத்தனை வருடமாக நடத்தி வருகிறேன் எ்ன்றால் 1997லிருந்து நடத்தி வருகிறேன். அவ்வாறு நடத்தி வருகிறேன் என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அது என் பெயரில் தான் உள்ளது. அடமான பத்திரம் போட்டுள்ளேன் என்றும் அதில் காலிமனை என்று உள்ளது என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.